# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சிக்கிம் மாநிலத்தின் நாதுலா கணவாய் வழியாக இந்திய - சீன எல்லைப் பகுதியில் நடைபெற்றுவந்த வர்த்தகம், 6 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டது.

   i. சிக்கிமின் கிழக்குப் பகுதியில் 14,000 அடி உயரத்தில் அமைந்துள்ள நாதுலா கணவாய் வழியே இந்திய - சீன எல்லையில் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட வர்த்தகம், கடந்த 1962-ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற போரால் வர்த்தகம் நிறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2006-ஆம் ஆண்டில் வர்த்தகம் மீண்டும் தொடங்கப்பட்டது.

   ii. எனினும், கரோனா பரவல் காரணமாகவும், இந்திய - சீன எல்லை மோதல் காரணமாகவும் கடந்த 2020-ஆம் ஆண்டில் இந்த வர்த்தகம் நிறுத்தப்பட்டது. தற்போது 6 ஆண்டுகளுக்குப் பிறகு நாதுலா கணவாய் வழியாக சனிக்கிழமை (ஆக.1) மீண்டும் வர்த்தகம் தொடங்கப்பட்டது.

   iii. நாதுலாவில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் இரு நாட்டு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில்பேசிய சிக்கிம் மாநில வர்த்தக மற்றும் தொழில் துறைச் செயலர் கர்மாடி யுட்சோ, நவம்பர் மாதம் வரை வாரத்தில் திங்கள்கிழமை முதல் வியாழக்கிழமை வரை வர்த்தகம் நடைபெறும் என்றார். நிகழாண்டில் 38 பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்களுக்கு வர்த்தக அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

   iv. இந்தியா, சீனா இடையே எல்லை வர்த்தகம் மீண்டும் தொடங்கப்பட்டு இருப்பதையடுத்து, நாதுலாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தோ-திபெத் எல்லை காவல் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதல்முறையாக இந்தோ-திபெத் எல்லை காவல் படையில் பணிபுரியும் வீராங்கனைகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2. பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்புசட்டத்திருத்த மசோதா 2026-க்கு

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியதைத்தொடர்ந்து, அந்த மசோதா சட்டமானது.

i. சிறப்பம்சங்கள்...:

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி), அரசுப் பணியாளர் தேர்வாணையம் (எஸ்எஸ்சி), ரயில்வே, வங்கி நியமனத் தேர்வுகள், தேசிய தேர்வு முகமையால் (என்டிஏ) நடத்தப்படும் தேர்வுகள் உள்ளிட்ட பொதுத் தேர்வுகளில் முறைகேடுகளைத் தடுக்கும் நோக்கில் 2024-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பொதுத்தேர்வு முறைகேடுகள் தடுப்புச் சட்டத்தில் கடுமையான பிரிவுகளுடன் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தேர்வு வினாத்தாள் கசிவு அல்லது பிற முறைகேடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூ.50 லட்சம் வரை அபராதம்; குழுவாகத் திட்ட மிட்டு அரங்கேற்றப்படும் குற்றங்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூ.10 கோடி வரை அபராதம்.
- தேர்வு முறைகேடு குற்றங்களை விசாரிக்க, சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்க மாநிலங்கள் - யூனியன் பிரதேசங்களுக்கு அதிகாரம்; இந்த நீதிமன்றங்களில் தினசரி அடிப்படையில் விசாரணை, குற்றப்பத்திரிகை தாக்கலான நாளில் இருந்து 3 மாத காலத்துக்குள் விசாரணையை நிறைவு செய்ய வேண்டும்; காவல் துறை, மத்திய முகமைகளின் விசாரணையை 2 மாதங்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட சிறப்பம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

3. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் கில்ஜித்-பல்திஸ்தான் பகுதியில் உள்ள 'பிராட் பீக்' மலையில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி, உலகின் புகழ்பெற்ற நேபாள மலை யேற்ற வீரரான நிர்மல் புர்ஜா (43) உள்பட 10 பேர் உயிரிழந்தனர்.

i. ராணுவப் பின்னணி கொண்ட நிர்மல் புர்ஜா, 2019-இல் உலகின் 8,000 மீட்டருக்கும் அதிகமான உயரம் கொண்ட 14 மிக உயரமான சிகரங்களையும் வெறும் 6 மாதங்கள் 6 நாள்களில் ஏறி உலக சாதனை படைத்தவர் ஆவார்.

4. உலக அளவில் தங்கத்தின் தேவை கடந்த ஏப்ரல்-ஜூன் காலாண்டில் பெரிய

மாற்றமின்றி 1,269 டன்னாக சீராக நீடித்தது கடந்த ஆண்டு இதே காலாண்டிலும் தங்கத்தின் தேவை 1,268.6 டன்னாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

i. சுரங்க உற்பத்தி மற்றும் மறுசுழற்சி ஆகியவற்றின் மூலம் ஏப்ரல்-ஜூன் காலாண்டில் தங்கத்தின் ஒட்டுமொத்த விநியோகம் 1,269 டன்னாக பதிவானது. கனடா மற்றும் சிலி நாடுகளின் உற்பத்தியால் புதிய சுரங்க விநியோகம் 2 சதவீதம் அதிகரித்து, 966 டன்னாக உயர்ந்தாலும், பழைய தங்கத்தின் மறுசுழற்சி 6 சதவீதம் குறைந்தது. இதன் மூலம் ஏப்ரல்- ஜூன் காலாண்டில் தங்கத் தேவையும் விநியோகமும் சமமாக இருந்தது. உலக நாடுகளின் மத்திய வங்கிகள் தங்களின் அந்நியச் செலாவணி இருப்பை வலுப்படுத்த, ஏப்ரல்-ஜூன் காலாண்டில் கூடுதலாக 289 டன் தங்கத்தை வாங்கியுள்ளன இது கடந்த ஆண்டைவிட 62 சதவீதம் அதிகமாகும் போலந்து, சீனா, செக் குடியரசு ஆகிய நாடுகள் தங்கம் வாங்குவதில் முன்னிலையில் இருந்தன. ரிசர்வ் வங்கியும் இக்காலகட்டத்தில் 200 கிலோ தங்கத்தைக் கூடுதலாக கொள்முதல் செய்துள்ளது.

ii. தங்கப் பத்திரம், இடிஎஃப் முதலீடுகள் மற்றும் தங்கக் கட்டிகள், நாணயங்களுக்கான முதலீட்டுத் தேவை ஏப்ரல்-ஜூன் காலாண்டில் 262 டன்னாக குறைந்துள்ளது. குறிப்பாக, இடிஎஃப் திட்டங்களிலிருந்து 45 டன் முதலீடுகள் வெளியேறியதே இச்சரிவுக்கு முக்கியக் காரணமாகும்.

iii. ஏப்ரல்-ஜூன் காலாண்டில், ஆபரணத் தங்கத்துக்கான தேவையும் 17 சதவீதம் சரிவைக் கண்டது. அதேநேரம், ஆசிய நாடுகளின் முதலீட்டு ஆதரவினால் முறைசாரா (ஓடிசி) சந்தை வர்த்தகம் ஏப்ரல்-ஜூன் காலாண்டில் 327 டன்னாகவும், முதல் அரையாண்டில் 571 டன்னாகவும் வலுவாக இருந்தது.

iv. ஒட்டுமொத்தமாக, ஜனவரி முதல் ஜூன் வரையிலான முதல் அரையாண்டில் தங்கத்தின் ஒட்டுமொத்த தேவை கடந்த ஆண்டைவிட 2 சதவீதம் அதிகரித்து 2,522 டன்னாக பதிவாகியுள்ளது. இதன் மொத்த மதிப்பு சுமார் 38,000 கோடி டாலராகும்.

5. இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு. கடந்த ஜூலை 24- ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 68.235.4 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

i. இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்ட தரவுகள் தெரிவிப்பதாவது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த ஜூலை 24- ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 611.8 கோடி டாலர் அதிகரித்து, 68,235.4 கோடி

டாலராக உள்ளது முந்தைய வாரத்தில், ஒட்டுமொத்த கையிருப்பு 108 கோடி டாலர் அதிகரித்து, 67,623.7 கோடி டாலராக இருந்தது.

ii. மேற்காசிய மோதல் தொடங்குவதற்கு முன்னதாக நடப்பு ஆண்டு பிப். 27-ஆம் தேதியு டன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 72,849.4 கோடி டாலர் என்ற வரலாற்று உச்சத்தை எட்டியது. பின்னர், மோதல் காரணமாக ரூபாய் மதிப்பு அழுத்தத்தைச்சந்தித்ததால், கையிருப்பு அடுத்தடுத்த வாரங்களில் சரிவைச் சந்தித்தது

iii. மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 487.3 கோடி டாலர் அதிகரித்து, 55,592.9 கோடி டாலராக உள்ளது. டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும்.

iv. மதிப்பீட்டு வாரத்தில், இந்தியாவின் தங்கம் கையிருப்பு 130.8 கோடி டாலர் உயர்ந்து, 10,305.8 கோடி டாலராக உள்ளது. சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆர்) 53 லட்சம் டாலர் குறைந்து, 1,861.7 கோடி டாலராக உள்ளது.

v. சர்வதேச நிதியத்தில் (ஐஎம்எஃப்) இந்தியாவின் கையிருப்பு 11 லட்சம் டாலர் குறைந்து, 475 கோடி டாலராக உள்ளது என ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## 6. காமன்வெல்த் குத்துச்சண்டை மகளிர்

இந்தியாவின் பிரீத்தி பவார் 54 கிலோ, ஜாஸ்மின் லம்போ ரியா 57 கிலோ, பிரியா 60 கிலோ, சாஷி சௌதரி 51 கிலோ பிரிவுகளில் தங்கம் வென்று அசத்தியுள்ளனர்.

i. மகளிர் 54 கிலோ பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை பிரீத்தி பவார் 5-0 என்ற புள்ளிக்கணக்கில் சரமாரியாக குத்துவிட்டு கனடாவின் ஸ்கார்லெட் டெல்காடோவை இறுதிச் சுற்றில் வீழ்த்தி தங்கம் வென்றார். இந்தியாவின் முதல் குத்துச் சண்டை பதக்கமாக இது அமைந்தது.

ii. மகளிர் 57 கிலோ பிரிவில் நடப்பு உலக சாம்பியன் ஜாஸ்மின் லம்போரியா 5-0 என்ற புள்ளிக்கணக்கில் நடப்பு சாம்பியன் வட அயர்லாந்தின் மிச்செலா வால்ஷை வீழ்த்தி தங்கம் வென்றார்.

iii. மகளிர் 60 கிலோ பிரிவில் இந்தியாவின் பிரியா கங்காஸ் இறுதிச் சுற்றில் 4-1 என்ற புள்ளிக் கணக்கில் கனடாவின் மேரி பாத்ஹோலை வீழ்த்தி தங்கம் வென்றார். 51 கிலோ பிரிவில் இந்தியாவின் சாக்ஷி சௌதரி 5-0 என்ற

புள்ளிக்கணக்கில் இங்கிலாந்தின் ரூபி ஒயிட்டை வீழ்த்தி தங்கம் வென்றார்.

iv. ஆடவர் 55 கிலோ பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவின் ஜாதுமணி சிங் - ஆஸ்திரேயிலாவின் ஜெடிக்ஸனும் மோதினர். இதில் ஜாதுமணி சிங் சிறப்பாக செயல்பட்டாலும் ஆஸி. வீரர் டிக்ஸன் ஆதிக்கம் செலுத்தி தங்கம் வென்றார். இதனால் ஜாதுமணி வெள்ளியோடு திருப்தி அடைய நேரிட்டது.

v. மகளிர் குத்துச்சண்டை 70 கிலோ பிரிவில் இந்தியாவின் அருந்ததி சௌதரி 5-0 என்ற புள்ளிக் கணக்கில் இங்கிலாந்தின் சான்டில் ரீடை வீழ்த்தி தங்கம் வென்றார். 2025 உலக சாம்பியன் ஷிப்பில் வெண்கலம் வென்றவர் சான்டில் ரீட்.

vi. ஆடவர் ஈட்டி எறிதலில் தங்கம் வெல்வார் எனக் கருதப்பட்ட முன்னாள் உலக, ஒலிம்பிக் சாம்பியன் நீரஜ் சோப்ரா ஏமாற்றத்தையே அளித்தார்.85.83மீ தொலைவுக்கு எறிந்து வெள்ளி வென்றார். மற்றொரு இந்திய வீரர் யஷ்வீர் சிங் 85.41 மீ தொலைவுக்கு எறிந்து வெண்கலம் வென்றார்.

vii. மகளிர் 10,000 மீ ஓட்டத்தில் இந்தியாவின் பிரியங்கா கோஸ்வாமி 7- ஆவது இடத்தையே பெற்றார். ஆடவர் டெக்காத்லான் பிரிவில் இந்தியாவின் தேஜஸ்வின் சங்கர் வெண்கலம் வென்றார்.

viii. பாரா குண்டு எறிதலில் கண்ணிவெடி தாக்குதலில் காலை இழந்த ராணுவ வீரர் சோமன் ராணா எஃப் 57 பிரிவில் 13.40 மீ தொலைவு எறிந்து தங்கம் வென்றார். அவரது சக வீரர் ஷபம் ஜுயல் 13.28 மீ தொலைவுக்கு எறிந்து வெள்ளி வென்றார். பாரா தடகளம் டி54 1500 மீ ரமேஷ் சண்முகம் 3:23:59 நிமிஷ நேரத்தில் கடந்து 7-ஆவது இடத்தையே பெற்றார்.

ix. ஜூடோவில் மகளிர் 63 கிலோ பிரிவில் இந்தியாவின் உன்னதி சர்மா அரையிறுதியில் ஆஸ்திரேலியாவின் சாயா மிடில்டனிடம் தோற்றார். எனினும் வெண்கல பதக்கத்துக்கான ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவின் இப்போனை வீழ்த்தி வெண்கலம் வென்றார். அதே போல் ஆடவர் 90 கிலோ ரெப் கேஜ் பிரிவில் கரன்ஜித் சிங் மான் அரையிறு தியில் ஸ்காட்லாந்தின் ஸ்காட் கஸாக்கிடம் தோற்றார்.

7. வெளியுறவுக் கொள்கைகளை வலுப்படுத்துவதில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் முக்கியப் பங்காற்றியதாக புகழாரம் சூட்டியமத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தோவலுக்கு லோகமான்ய திலக் தேசிய விருதை வழங்கினார்.